International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 02 Issue: 03 July to September 2020 www.irjtsjournal.org

# தமிழ் இலக்கியங்களில் முருகப் பெருமானின் அவதாரங்கள்

[1]முனைவர்.செ.ரவிசங்கர், [2]பா.முருகன்,

*[1]உதவிப்பேராசிரியர், [2]பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்*
*ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச்சுருக்கம் :**

சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து உதித்தவர் முருகப்பெருமான். முருகப் பெருமானின் அவதாரங்கள் தமிழ் இலக்கியங்களில் எவ்வாறாக காணப்படுகின்றது என்பதை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது. இக்கட்டுரை முருகனின் அறுபடை வீடுகள், முருகப் பெருமானின் அவதாரங்கள் குறித்த தகவல்கள், சிவபெருமானின் ஆறுமுகம், முருகனுக்கு வழங்கும் வேறு பெயர்கள் போன்ற பல்வேறான கருத்துக்களை உள்ளடக்கியதாக அமைகின்றது.

**முன்னுரை :**

முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் முதலாவது படைவீடாகத் திகழ்வது திருப்பரங்குன்றம் ஆகும். இத்தலம் மதுரைக்குத் தென்மேற்கில் அமைந்துள்ளது.

**திருவீற்றிருந்த தீதுதீர் நியமத்து**
**மாடமலி மறுகிற் கூடற் குடலாயின்**

-திருமுருகாற்றுப்படை. பா.70

**பரங்குன்று இமயக்குன்றம் நிகர்க்கும்**

- பரிபாடல் . 11

இமயத்திற்கு நிகரான திருத்தலம் திருப்பரங்குன்றம். திருப்பரங்குன்றத்தைத் திரு ¸ பரம் ¸ குன்றம் ஸ்ரீ திருப்பரங்குன்றம் என்று பிரித்தெழுதுவர். ஈண்டு'பரம்' என்றால், பரம்பொருளான சிவபெருமானைக் குறிக்கும். 'குன்று' என்றால் சிறுமலை அ∴தாவது குன்றிய மலை என்று பொருள்படும்.

அறுபடையில் இரண்டாவது படை வீடு திருச்செந்தூர். "தமிழ்நாட்டில் தெய்வநலம் பெற்ற ஊர்களில் பெரும்பாலும் 'திரு' என்றும் அடைபெற்று வழங்கும்.'இல்' என்பது பெரும்பாலும் மக்கள் வாழும் வீட்டைக் குறிக்கும். ஆயினும் இச்சொல் பழமையான ஊர்ப்பெயர்களிலும் சேர்ந்திருக்கிறது." (தமிழ் - ஆங்கில அகராதி, ப.எண். 715) சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றும் செந்தீயில் உதித்தவர் முருகப்பெருமான். ஆகையால் தோற்றம் செந்நிறம் கொண்டதாக விளங்குகிறது.

திருச்செந்தூரக்குப் பல பெயர்கள் உண்டு. செந்தில், அலைவாய், திருச்செந்தில், திருச்சீரலைவாய், திருச்செந்தூர், செயந்திபுரம், கந்தமாதனம், சந்தனாசலம் என்பனவாகும்.

**வார்த்தைச் சிற்பர தீர்திதச் சுற்றலை**
**வாய்க்குட் பொற்பமர் பெருமானே**

-கிருபானந்தவாரியார் - திருப்புகழ் - முதல் தொகுதி, பாடல் எண். 59, ப.496)

திருச்செந்தூரை தீர்ந்தச்சுற்றலைவாய் என்று போற்றிப் பாடியுள்ளார் அருணகிரிநாதர்.

முருகனின் மூன்றாம் படைவீடு பழனி ஆகும். இதன் இலக்கியப் பெயர் திருவாவினன்குடி. பழனி மலை முருகப்பெருமானுக்குத் 'தண்டாயுத பாணி' என்ற பெயர் வழங்கப்பட்டு வருகிறது. பழனி மலை மிகவும் பழமையான திருத்தலம். ஆதலால் அருணகிரிநாதர் **'பழனியைப் பழைய பழநி'** (கிருபானந்தவாரியார், திருப்புகழ் மூன்றாம் தொகுதி, பாடல் எண். 18, ப.1) பாடியுள்ளார்.

**கூறுடையாளும் குன்றாக்**
**குணப்பெருங் குன்றும் 'ஞானப்**
**பேறுடைப் பழம் நீ!' என்ன,**
**பெயரது மருவி எங்கள்**
**ஆறுமா முகவன் னவரும்**
**நகரமும் அன்று தொட்டு**
**வீறுதொல் பழநி' என்றே**
**விளம்பின உலகம் மூன்றும்**

(பி.ஸ்ரீ.வ.ஆ.) அறுபடை வீடுகள் பழநி, ப.81)

பழநி தலபுராணத்தில் உமாதேவியும், சிவபெருமானும் தண்டாயுதபாணியை 'பழம் நீ' என்று சொன்னதரால் ஆவினன்குடி 'பழநி' ஆயிற்று. பழநியின் பெருமையை அருணகிரிநாதர்,**"பதினாலுலகோர் புகழ் பழநி"** (பாடல் 60, பக். 354) **"ஞானமலை"**(கிருபானந்தவாரியார், திருப்புகழ் மூன்றாம் தொகுதி, பாடல் 91, ப.521)

முருகனின் நான்காவது படைவீடு சுவாமிமலை ஆகும். **"பிறவி நீத்திடும் துருவமாந் தலைமை எய்திய ஏரகத்தறு முருகன்"** (பூவண்ணன் (உ.ஆ.), கந்தபுராணம் முதல் தொகுதி, பாடல் எண். 20, பக். 26) என்று கந்தபுராண கடவுள் வாழ்த்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் சுவாமிமலை முருகனை போற்றி புகழ்ந்து பாடியுள்ளார்.

'ஏரகம்' என்பது சுவாமி மலையைக் குறிக்கும். திரு என்னும் அடைமொழி சேர்த்து திருவேரகம் என்பர். சுவாமிமலை குருமலை என்பர்.

**''குருமலை மருவிய பெருமானே'' (**கிருபானந்த வாரியார் (உ.ஆ.), திருப்புகழ் நான்கா் தொகுதி, பாடல் 8, பக். 31) சுவாமி மலை காவிரியின் வடபுறம் அமைந்துள்ளது என்பதனை,

**''வளைகுல மலங்கு காவி ரியின் வடபுறச்சுவாமி**
**மலைமிசை விளங்கு தேவா் பெருமாளே''**

என்ற பாடல் வரிகளின் வாயிலாக அறிய இயலுகிறது. (கிருபானந்தவாரியாா், (உ.ஆ.), திருப்புகழ் நான்காம் தொகுதி, பாடல் எண். 4)

முருகப்பெருமானின் படைவீடுகளில் ஐந்தாவது படைவீடாகப் இருப்பது திருத்தணிகை. இம்மலைமேல் குவளைப்பூ நாள்தோறும் மலா்வதால் **'குவளைச்சிகிரி'**(கிருபானந்தவாரியாா், (உ.ஆ.), திருப்புகழ் ஐந்தாம் தொகுதி, பாடல் எண். 34, பக். 174) என்று அருணகிரிநாதா் போற்றிப் பாடியுள்ளாா்.

**''தணிகையென் றொருகால் ஓதில் சாலோக பதவியெய்தம்**
**தணிகையென்றிருகால் ஓதில் சாமீப பதவி யெய்தும்**
**தணிகை யென்றுரைக்கில் முக்கால் சாரூபம் நண்ணும் செவ்வேள்**
**தணிகை யென்றுரைக்கின் நாற்கால் சாயுச்யம் அடைவா்''**
-(கிருபானந்தவாரியாா், (உ.ஆ.), திருப்புகழ் ஐந்தாம் தொகுதி, பக். 177)

முருகப் பெருமானின் ஆறாவது படைவீடாக பழமுதிா்ச்சோலையாகும். மதுரைக்கு வடக்கே 12 மைல்கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள சுனை **'நூபுரகங்கை'**(திருப்புகழ் ஆறாம் தொகுதி, பக். 352) எனப்படும். இந்த நூபுரகங்கையை சிலம்பாறு என்றும் அழைப்பா்.

**''சிலம்பாறு பாயும் திருமாவிருஞ் சோலையே'' (**நாலாயிர திவ்வியபிரபந்தம், திருமொழி ஒன்பதாம் திருமொழி, (பாடல்கள், 1836)

திருமுருகாற்றுப்படையில் நக்கீரா் பழமுதிா்ச் சோலையைப் புகழ்ந்து பாடியுள்ளாா். பழமுதிா்ச்சோலை முருகப்பெருமானை **'மலைக் கிழவோனே'**(திருமுருகாற்றுப்படை, பாடல் எண். 317) என்று போற்றியுள்ளாா்.

**முருகப்பெருமானின் அவதாரம் :**

முருகப்பெருமானின் விண்ணுலக தேவா்கள் அசுரா்களின் கொடுமைகளிலிருந்து விடுபடுவதற்காக நிகழ்ந்தது. அதற்காக சிவபெருமானிடம் தேவா்கள் வேண்டிக் கொண்டனா். அவ்வேண்டுதலை ஏற்றுச் சிவபெருமான் முருகப் பெருமானை தம்முடைய நெற்றிக் கண்களில் தீப்பொறி எழச் செய்து அருளினாா். முருகப் பெருமானின் அவதார நிகழ்வுக்கு மூலகாரணமாக விளங்கிய அச்சிவபெருமானின் வாயிலாகத்தான் இந்த உலகமும் உருவானதென்று தேவாரம், திருவாசகம் முதலான சைவத் தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. அந்த வகையில் சிவபெருமானால் தோன்றிய இந்த உலகமானது பஞ்சபூதங்களால் ஆனது என்பதனை

இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது. 1. நிலம், 2. நீர், 3. காற்று, 4. தீ, 5. ஆகாயம் என்று சொல்லும்படியான ஐம்பூதங்களின் கலவையே ஆகும்.

**"நிலம், தீ, நீர், வளி, விசும்பொடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்"**

-(புலியூர்க்கேசிகன், (உ.ஆ.), தொல்.நூற்பா. எண். 635)

என்று பழமை வாய்ந்த இலக்கண நூலான தொல்காப்பியத்தில் வரும் நூற்பா வாயிலாகப் படித்தறியலாம்.

**சிவபெருமானின் ஆறுமுகம் :**

திருமால், பிரமன், இந்திரன் முதலான தேவர்களின் வேண்டுகோளை ஏற்ற சிவபெருமான, அறிவு மிகுந்த பழைய ஆறு திருமுகங்கள் கொண்டான் என்பதனை கந்தபுராணம் பாடல்களின் மூலம் அறியமுடிகிறது.

**"வந்திக்கும் மலரோன் ஆதி வானவர் ஊரத்தல் கேளாய்**
**புந்திக்குள் இடர்செய் யற்க புதல்வனைத் தருதும் என்னா**
**அந்திக்கு நிகர் செய் அண்ணல் அருள்புரிந்து அறிஞர் ஆகியோர்**
**சிந்திக்கும் தனது தொல்மைத் திருமுகம் ஆறும் கொண்டான்"**

-பூவண்ணன் (உ.ஆ.), கந்தபுராணம் ஆறாம் தொகுதி, பாடல். 893)

மேற்கூறிய பாடலின் வாயிலாக அறிவுமிகுந்த சான்றோர் தியானிக்கின்ற தன்னுடைய பழைய ஆறுமுகங்களையும் முருகப் பெருமானைத் தோற்றுவிப்பதற்காக சிவபெருமான் மேற்கொண்டான். அப்படிப்பட்டடி ஆறுமுகச் சிவபெருமான் ஆறுமுகங்கள் கொண்டு ஒவ்வொன்றிலும் உள்ள நெற்றிக்கண் மூலமாகத் தீப்பொறியெழச் செய்து முருக்ப்பெருமானை தோற்றுவித்தார்.

**முருகப் பெருமானுக்க வழங்கப்பட்டு வரும் வேறு பெயர்கள் :**

இறைவனாம் முருகப் பெருமானை நூற்றியெட்டு திருநாமம், ஆயிரத்தெட்டு திருநாமம் என்று கூறி இன்றும் மக்கள் போற்றி வழிபட்டு வருகின்றனர். திருக்கோயில்களில் முருகப்பெருமானுக்கு அர்ச்சகர்கள் பலவிதமான வண்ண மலர்களால் பல்வேறு நாமங்களைக் கூறி அர்ச்சனை செய்வர். அதன் மூலம் முருகப் பெருமானுக்குப் பலவிதமான பெயர்கள் வழங்கப்பட்டு வருவதையும் அறியலாம். **'முருகன் அருட்செல்வன்'**என்னும் நூலில் முருகனுக்கரிய நாமங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

1. ஆறுமுகன் - ஆறுமுகங்களையுடையவன்

2.உமாசுதன் - உமாதேவியின் குமாரன்

3. கங்கை மைந்தன் - கங்கையின் குமரான்

4. கடம்பன் - கடம்ப மலர்மாலை அணிந்தவன்

5. கந்தன் - தோள்வலிமை மிக்கவன்

6. கயாரூட மூர்த்தி – யானையை வாகனமாக உடையவன்

7. கசவாகனன் - யானயையின் மீது ஊர்பவன்

8. காங்கேயன் - கங்கையில் தோன்றியவன்

9. கார்த்திகேயன் - கார்த்திகைப் பெண்டிரால் வளர்க்கப்பட்டவன்

10. குகன் - பக்தர்களின் மனக் குகையில் வாழ்பவன்

11. குமரன் - இளைய கடவுள்

12. குமாரசாமி – சிவபெருமானின் குமரன்

13. குரு, குருநாதன் - குருவாக விளங்குபவன்

14. குருபரன் - ஆசாரியனுக்கு ஆசாரியன்

15. குழகன் - இளைஞன், அழகன். இளமைப்பருவ முடையவன்

16. குறிஞ்சிவேந்தன் - குறிஞ்சி நில தலைவன்

17. குறிஞ்சிவேலவன் - குறிஞ்சி நில காவலன்

18. குன்றெறிந்தோன் - கிரவுஞ்ச மலையை வேலால் வென்றவன்

19. கௌரி நந்தன் - கௌரிதேவி (பார்வதி தேவியின்) குமரன்

20. கோழிக் கொடியோன் - கோழியைக் கொடியாக உடையவன்.

21. சக்திதாசன் - அருள்ஞான சக்திதரன் (தணிகை முருகன்)

22. சண்முகன், சண்முகநாதன் - ஆறுதிருமுகங்களை உடையவன்

23. சரவணபவன், சரவணன் - சரவணப் பொய்கையில் தோன்றியவன்

24. சித்தன் - சித்தியை வழங்குபவன்

25. சிலம்பன் - மலையில் வசிப்பவன், சிலம்பு அணிந்தவன்

26. சுப்பிரமணியன் - பிரம்மத்தில் உதித்தவன்

27. சுவாமி – அகில உலகையும் சொத்தாக உடையவன்

28. சுவாமிநாதன் - தந்தைக்கு உபதேசம் செய்தவன்

29. சுரேசன் - முருகன்

30. சூராந்தகன், சூர்ப்பகைவன் - சூரபன்மனை வதைத்தவன், அழித்தவன்

31. செவ்வேள், சேந்தன் - செந்நிறமுடையவன், செந்தழலாய் விளங்குபவன்

32. சேய், சேயோன் - செந்நிறமுடையவன், இளமையை உடையவன்”

-(பாலமுருகன் (ஆ) முருகன் அருட்செல்வன், பக் 23)

**கந்தன் என்ற பெயர் :**

கந்து ‚ அன் ஸ்ரீ கந்தன். கந்து என்பது யானை கூடும் இடத்தைக் குறிக்கும். ஆன் - ஆண்பால், ஒருமை விகுதி, ஆன்மாக்களுக்குப் பற்றுக்கோடாக விளங்குபவன் என்று பொருள்.

கந்தன் எந்த சொல்லுக்கும் ஒன்றாக்கப்பட்டவன்.

**“எந்தை சக்திகள் உயிரெலாம் ஒருங்குறும் எல்லை**
**முந்து போலஒன் றாகியே கூடிய முறைபோல்**
**அந்தம் இல்லாதோர் மூவிரு வடிவம் ஒன்றாகிக்**
**கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்”**

-பூவண்ணன் (உ.ஆ.), கந்தபுராணம் இரண்டாம் தொகுதி, பா.எண். 1035)

**கார்த்திகேயன் என்ற பெயர் :**

கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்த காரணத்தினால் முருகப்பெருமானுக்குக் கார்த்திகேயன் என்னும் பெயரைப் பெறுவானாக என்று சிவபெருமான் உரைத்தார். மேலும், கார்த்திகை தினத்தில் முருகப் பெருமானை வணங்குபவர்கள் எத்தகையவரானலும், நாம் அவர்களுடைய குறைகளைத் தீர்த்து முக்தியைத் தருவோம் என்று அருளினார்.

**“கந்தன் தனை நீர்போற்றிய கடனால் இவன் உங்கள்**
**மைந்தன் எனும் பெயராகுக மகிழ்வால் எவரேனும்**
**நுந்தம் பகலிடை இன்னவன் நோன்றாள் வழிபடுவேன்**
**தந்தங்குறை முடித்தே பரம்தனை நல்குவம் என்றான்”**

-பூவண்ணன் (உ.ஆ.), கந்தபுராணம், 2-ஆம் தொகுதி, பக்.1044

**சரவணன் என்ற பெயர் :**

சரவணப் பொய்கையில் பிறந்ததால் சரவணன் என்ற பெயர் வந்தமைந்தது. ‘சரம்’ என்றால் நானல் என்றும்,‘வனம்’ என்றால் காடு என்றும்,‘பவன்’ என்றால் நீரில் தோன்றியவன் என்றும் பொருள். நாணல் நிறைந்த காட்டில் பொய்கையில் தோன்றிய காரணத்தினால் முருகப் பெருமானை சரவணபவன் என்றும், சரவணன் என்று அழைக்கிறோம்.

**“ஈங்கனம் நமது கண்ணி னெய்திய குமரன் கங்கை**
**தாங்கினள் கொண்டு சென்று சரவணத்திடுதலாலே**
**காங்கய னெனப் பெற்றான் காமர் பூஞ்சரவணத்தின்**
**பாங்கரின் வருதலாலே சரவணபவனென் றானன்”**

**முருகன் என்ற பெயர் :**

முருகப் பெருமான் இளமை, அழகு, செல்வம் முதலியவற்றால் பொலிபவன் ஆதலின் முருகன் எனப் பெயர் பெற்றான் முருகன் என்பதற்கு 'அழகன்', வாசனை உடையவன் என்று பொருள். இனிமை, அழகு, நன்மனம் பெற்றுள்ளதால் இப்பெயர் ஏற்பட்டது. மு –மெல்லினம், ரு - இடையினம், க – வல்லினம், ஆக முத்தமிழ்க்கடவுள் முருகன் என்பதனை உணரலாம்.

**சித்தன் என்ற பெயர் :**

முருகப் பெருமான் அன்பர்களுக்குச் சித்தியை வழங்குபவராகவும், எல்லாம் வல்ல சித்தராகவும் விளங்குவதால் வந்தமைந்த பெயர் சித்தன் என்பதாகும். பழனிக்கு **'சித்தன் வாழ்வு'** என்ற பெயர் உண்டு. சித்தர் மலையான பழனிமலையில் எழுந்தருளிய காரணத்தினால் முருகப் பெருமானைச் சித்தன் என்று பக்தர்கள் அழைப்பது வழக்கம்.

**சுவாமிநாதன் என்ற பெயர் :**

தந்தைக்கு உபதேசம் சொன்ன காரணத்தினால் சுவாமிநாதன் என்றும், தகப்பன் சாமி என்றும், குருநாதன் என்றும் கூறுவர்.

**"என்றலு நகைத்த மைந்த வெமக்கருள் மறைபசி னென்னாத்**
**தன்றிடுஞ் செவியை நல்கச் சண்முகன் குடிலை யென்னும்**
**ஒன்றொரு பதத்தினுண்மை யுரைத்தன னுரைத்தல் கேளா**
**நன்றருள் புரிந்த னென்ப ஞானநா ய்கனா மண்ணல்"**
-பூவண்ணன் (உ.ஆ.), கந்தபுராணம், 2-ஆம் தொகுதி, பா.எண்.1262

**விசாகன் என்ற பெயர் :**

விசாகம் என்னும் நட்சத்திரத்தில் முருகப் பெருமான் தோன்றிய காரணத்தினால் விசாகன் என்ற பெயர் வந்தது. ஆறு நட்சத்திரங்களின் சேர்க்கையே விசாகம் ஆகும். வைகாசி விசாகம் மிகவும் சிறப்புடையது என்பர். 'வி' என்றால் பறவை என்றும்,'வாகன்' என்றால் சஞ்சரிப்பவன் என்றும் கூறுவர்.

**வேலாயுதன் என்ற பெயர் :**

வேற்படையை முருகப்பெருமான் தமக்குரிய ஆயுதமாகக் கொண்டுள்ளதால் வேலாயுதன் என்ற பெயர் வந்தது. இதனை**"வரவர வேலாயுதனார் வருக"** என்று பாலதேவராயன் பாடிய பாடல் வரியின் வாயிலாக அறியலாம். வெல்லுதலைச் செய்வது வேல, வேல் என்னம் சொல்லின் முதனிலை நீண்ட வேல் என்றானது. எனவே, வேல் என்னும் சொல்லை இலக்கணம் அறிந்தோர் முதனிலை நீண்ட தொழிற்பெயர் என்பர்.

**சேயோன் என்ற பெயர் :**

முருகப்பெருமான் செந்நிறமுடையவன் என்பதால் சேயோன் என்ற பெயர் பெற்றான். சேய் என்றால் குழந்தை என்றொரு பொருளும் உண்டு. சிவபெருமானின் பிள்ளை என்பதாலும், இளமையாய் இருப்பதாலும் முருகப் பெருமானை சேய் என்றும் சேயோன் என்றும் அழைப்பர். தொல்காப்பியர் முருகப் பெருமானை,

**“சேயோன் மேய மைவரை உலகம்”**

என்று தொல்காப்பிய நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை:**

முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகள் பற்றியும், சிறப்புகளைப் பற்றியும், அவதாரங்களைப் பற்றியும் ஒவ்வொரு அவதாரங்களின் சிறப்புகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. பக்தி இலக்கியத்தில் சைவமும், வைணமும் இருகண்களாக விளங்குகிறது.